
# அரசினர் மேல்நிலைப் பள்ளி, பரந்தூர்.

## காஞ்சிபுரம் மாவட்டம்

## பதினோராம் வகுப்பு

# கணக்குப் பதிவியல்

## ஒரு மதிப்பெண் வினா - விடைகள்




B. பாலாஜி,
முதுகலை ஆசிரியர் - வணிகவியல்,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
பரந்தூர்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 552.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# அலகு 1 - கணக்கியல் அறிமுகம்

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது ( மார்ச் 2019, செப் 2021 , ஆகஸ்ட் 2022 )
   அ) சமூகக் கணக்கியல்
   ஆ) காரியதரிசிகளின் கணக்கியல் ( ஜூன் 2023, 2024 )
   இ) மேலாண்மைக் கணக்கியல்
   ஈ) பொறுப்பு கணக்கியல்

2. பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது? ( செப் 2020 , மே 2022 )
   அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்
   ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்
   இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்
   ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

3. பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம் பெறாது.
   அ) நிதிநிலைக் கணக்கியல்
   ஆ) மேலாண்மைக் கணக்கியல்
   இ) மனிதவளக் கணக்கியல்
   ஈ) மேற்கண்டஏதுமில்லை

4. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது ( ஜூன் 2019 , மார்ச் 2023 )
   அ) குறிப்பேடு
   ஆ) இருப்பாய்வு
   இ) இருப்பு நிலைக் குறிப்பு
   ஈ) பேரேடு

5. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்? ( ஜூன் 2019 , 2023 , மார்ச் 2024 )
   அ) கடனீந்தோர்
   ஆ) பணியாளர்
   இ) வாடிக்கையாளர்
   ஈ) அரசு

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஆ | 2. ஈ | 3. ஈ | 4. இ | 5. ஆ |

# அலகு 2. கணக்கியலின் கருத்துக் கட்டமைப்பு

1. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து ( மார்ச் 2019, செப் 2021 )
   அ) பண மதிப்பீட்டுக் கருத்து
   ஆ) அடக்கவிலை கருத்து
   இ) வணிகத் தனித்தன்மை கருத்து
   ஈ) இரட்டைத்தன்மை கருத்து

2. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
   அ) வணிக தனித்தன்மை கருத்து
   ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து ( செப் 2020, ஜூன் 2023
   இ) கணக்கியல் கால அனுமானம்
   ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை ( மார்ச் 2024 )

3. GAAP என்பது: ( மே 2022 , மார்ச் 2024 )
   அ) பொதுவாக ஏற்றுக் கொள்ளடப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
   ஆ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
   இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
   ஈ) இவற்றுள் ஏதுமில்லை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. இறுதி சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு ( செப் 2021 , ஆகஸ்ட் 2022 )

அ) முக்கியத்துவ மரபு ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து

இ) முன்னெச்சரிக்கை மரபு ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து

5. இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு ( மார்ச் 2023 , ஜூன் 2023, 2024 )

அ) இந்திய மைய வங்கி

ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்

இ) உச்சநீதி மன்றம்

ஈ) இந்தியப் பட்டயக்கணக்காளர் நிறுவனம்

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. ஆ | 3. ஆ | 4. இ | 5. ஈ |

# அலகு 3 - முதன்மைப் பதிவேடுகள்

1. கணக்கியல் சமன்பாடு குறிப்பது ( மார்ச் 2023 )

அ) வியாபாரத்தின் முதல், சொத்திற்கு சமமானது

ஆ) வியாபாரத்தின் பொறுப்புகள், சொத்திற்கு சமமானது

இ) வியாபாரத்தின் முதல், பொறுப்புகளுக்கு சமமானது

ஈ) வியாபாரத்தின் சொத்துகள், முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது

2. சொந்த பயன்பாட்டிற்காக உரிமையாளரால் வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகையால் ஏற்படும் நிலை

அ) சொத்தின் மதிப்பு குறையும், உரிமையாளரின் முதலின் மதிப்பு குறையும்

ஆ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், மற்றொரு சொத்தின் மதிப்பு குறையும்

இ) ஒரு சொத்தின் மதிப்பு உயரும், பொறுப்புகளின் மதிப்பு உயரும்

ஈ) சொத்தின் மதிப்பு உயரும், முதலின் மதிப்பு குறையும்

3. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹. 1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹. 60,000 எனில், அந்நிறுவனத்தில் முதல் ------------ ( மார்ச் 2019 )

அ) ₹. 1,60,000 ஆ) ₹. 60,000 இ) ₹. 1,00,000 ஈ) ₹. 40,000

4. கணக்கியல் சமன்பட்டின்படி சரியாக இல்லாதது. ( மார்ச் 2024 )

அ) சொத்துக்கள் = பொறுப்புகள் + முதல் ஆ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்

இ) பொறுப்புகள் = சொத்துக்கள் + முதல் ஈ) முதல் = சொத்துக்கள் - பொறுப்புகள்

5. கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது? ( ஜூலை 2024 )

அ) இரட்டைத் தன்மை ஆ) நிலைத்தன்மை இ) நிறுவனத் தொடர்ச்சி ஈ) நிகழ்வுத்தன்மை

6. சொத்து கணக்கு கையாள்வது ( செப் 2020 , மே 2022 )

அ) தனிப்பட்ட நபர்கள் ஆ) செலவுகள் மற்றும் இழப்புகள்

இ) சொத்துகள் ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்

7. பின்வருனவற்றில் பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு எது? ( ஜூன் 2023 )

அ) கட்டடம் கணக்கு ஆ) கொடுபடவேண்டிய சம்பள கணக்கு

இ) மகேஷ் கணக்கு ஈ) பாலன் நிறுவனம்

8. முன் கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு

அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு

இ) சொத்துக் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

9. உரிமையாளரால், வணிகத்திலிருந்து எடுக்கப்படும் தொகை வரவு வைக்கப்படும் கணக்கு

அ) எடுப்புகள் கணக்கு ஆ) ரொக்கக் கணக்கு ( ஜூலை 2024 )

இ) முதல் கணக்கு ஈ) கொள்முதல் கணக்கு

10. இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது ( செப் 2021 , ஆகஸ்ட் 2022 , ஜூன் 2023 )

அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் ஆ) ஒரேகணக்கில், வெவ்வேறு தேதிகளில்

இ) ஒரே கணக்கின் இரு பக்கங்களில் ஈ) குறைந்தபட்சம் மூன்று கணக்குகள்

<u>விடைகள்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஈ | 2. அ | 3. ஈ | 4. இ | 5. அ |
| 6. இ | 7. ஆ | 8. ஈ | 9. ஆ | 10. அ |

# அலகு 4 . பேரேடு

1. பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம் ( மார்ச் 2023 )

அ) நிதி நிலைமையை அறிய

ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய

இ) நிதிநிலைமை மற்றும் இலாப நட்டத்தை அறிய

ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

2. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம். ( ஆகஸ்ட் 2022 , ஜூன் 2023 , மார்ச் 2024 )

அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல் இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்

3. கு.ப.எ. என்பது

அ) பேரேட்டு பக்க எண் ஆ) குறிப்பேட்டு பக்க எண்

இ) சான்று சீட்டு எண் ஈ) ஆணை எண்

4. ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்று பத்தியின் மொத்தத்திலிருந்தும் மற்றும் வரவுப் பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகர இருப்பினை கண்டறியும் வழிமுறையை இவ்வாறு அழைக்கலாம். ( ஜூன் 2019 , மே 2022 )

அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல் இ) குறிப்பேட்டில் பதிதல் (ஈ) இருப்புக் கட்டுதல்

5. ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள் ( செப் 2021 , ஆகஸ்ட் 2022 )

அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு இ) இருப்பு இன்மை ஈ) பற்றும் மற்றும் வரவு இருப்பு

6. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது ( மார்ச் 2019 , செப் 2020 )

அ) ரொக்க கணக்கு ஆ) எடுப்புக் கணக்கு இ) முதல் கணக்கு ஈ) அனாமத்து கணக்கு

**விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஈ | 2. ஆ | 3. ஆ | 4. ஈ | 5. ஆ |
| 6. இ | | | | |

# அலகு 5. இருப்பாய்வு

1. இருப்பாய்வு என்பது ஒரு ( ஜூன் 2023 , ஜூலை 2024 )

அ) அறிக்கை ஆ) கணக்கு இ) பேரேடு ஈ) குறிப்பேடு

2. பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது ( செப் 2021 , ஆகஸ்ட் 2022 )

அ) வியாபாரக் கணக்கு ஆ) இருப்பாய்வு இ) குறிப்பேடு ஈ) இலாப நட்டக் கணக்கு

3. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்? ( மார்ச் 2024 )

அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்
இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

4. கீழ்கண்டவற்றில் எது / எவை இருப்பாய்வு தயாரிப்பதன் நோக்கங்களாகும்

அ) அனைத்து பேரேட்டுக் கணக்குகளின் சுருக்கத்தைத் தருவது.
ஆ) இறுதிக் கணக்குகளைத் தயாரிக்க உதவுவது
இ) கணக்குகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையைப் பரிசோதிப்பது
ஈ) (அ), (ஆ) மற்றும் (இ)

5. பற்று இருப்புகளும் மற்றும் வரவு இருப்புகளும் சமமாக இருக்கின்றனவா என அறிய அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளையும் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பட்டியல் ( செப் 2021 )

அ) குறிப்பேடு ஆ) நாளேடு இ) இருப்பாய்வு ஈ) இருப்பு நிலைக்குறிப்பு

6. பின்வரும் எந்த முறை அல்லது முறைகளில் இருப்பாய்வு தயாரிக்கப்படுகிறது? ( செப் 2020 )

அ) இருப்பு முறை ஆ) மொத்தத் தொகை முறை
இ) மொத்தத் தொகை முறை மற்றும் இருப்பு முறை ஈ) அ), ஆ) மற்றும் இ)

7. இருப்பாய்வு தயாரிக்கும்போது, கணக்காளர் இருப்பாய்வின் வரவு பக்கத்தில் மொத்த தொகை ₹. 200 குறைவாக இருப்பதைக் கண்டறிந்தார். அந்த வேறுபாட்டினை அவர் என்ன செய்வார்?

அ) அனாமத்து கணக்கில் பற்று செய்வார்
ஆ) அனாமத்து கணக்கில் வரவு செய்வார்
இ) ஏதேனும் பற்று இருப்புக் கொண்ட கணக்கில் சரி செய்வார்
ஈ) ஏதேனும் வரவு இருப்புக் கொண்ட கணக்கில் சரி செய்வார்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. கீழ்க்கண்ட கணக்குகளில் எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் தோன்றும்? ( செப் 2020 , மே 2022 , ஆகஸ்ட் 2022 , ஜூலை 2024 )

அ) பற்பல கடனீந்தோர் கணக்கு ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
இ) எடுப்புகள் கணக்கு ஈ) முதல் கணக்கு

9. இருப்பாய்வில் பற்றுப் பத்தியின் மொத்தமும் வரவுப் பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு ( மார்ச் 2019 , மார்ச் 2023 , ஜூன் 2023 )

அ) வியாபாரகணக்கு ஆ) வேறுபாட்டு கணக்கு இ) அனாமத்து கணக்கு ஈ) இதர கணக்கு

10. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது ( மே 2022 )

அ) ஆண்டு இறுதியில் ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
இ) ஒரு பருவகாலம் முடிந்ததும் ஈ) இவை ஏதும் இல்லை

**விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. அ | 2. ஆ | 3. ஈ | 4. ஈ | 5. இ |
| 6. ஈ | 7. ஆ | 8. இ | 9. இ | 10. ஆ |

# அலகு 6. துணை ஏடுகள் – I

1. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது ( செப் 2020 , மே 2022 , ஆகஸ்ட் 2022 )

அ) அனைத்து சரக்குகளின் கொள்முதல் ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் கொள்முதல்
இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் ஈ) அனைத்து சொத்துக்களின் கொள்முதல்

2. ஒரு குறிப்பிட்ட கால கொள்முதல் ஏட்டின் மொத்தம், எடுத்தெழுதப்படுவது

அ) கொள்முதல் கணக்கின் பற்று பக்கம் ஆ) விற்பனை கணக்கின் பற்று பக்கம்
இ) கொள்முதல் கணக்கின் வரவுப் பக்கம் ஈ) விற்பனை கணக்கின் வரவுப் பக்கம்

3. விற்பனை ஏடு எதைப் பதிவு செய்ய உதவுகிறது? ( செப் 2021, மார்ச் 2023 )

அ) அனைத்து சரக்குகளின் விற்பனை ஆ) அனைத்து சொத்துக்களின் கடன் விற்பனை
இ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை
ஈ) அனைத்து சொத்துக்கள் மற்றும் சரக்குகள் விற்பனை

4. விற்பனை ஏட்டின் மொத்தம் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வரவு வைக்கப்படுவது ( ஜூன் 2023 ஜூலை 2024 )

அ) விற்பனை கணக்கு ஆ) ரொக்ககணக்கு இ) கொள்முதல் கணக்கு ஈ) உரிய குறிப்பேடு

5. கொள்முதல் திருப்ப ஏடு பதிவு செய்வது ( செப் 2021 )

அ) சரக்களித்தோருக்கு, உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு
ஆ) அளித்தவரிடம் உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சொத்துகள்
இ) உடனடியாக பணம் பெற்றுக் கொண்டு சொத்து வாங்கியவரிடம் திருப்பியது
ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. விற்பனைத் திருப்ப ஏடு பதிவு செய்வது ( மே 2022 )

அ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது
ஆ) வாடிக்கையாளரால் திருப்பிய சரக்குகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தாதது
ஈ) வாடிக்கையாளரால் திருப்பிய சொத்துகளுக்கு உடனடியாக பணம் செலுத்தியது

7. நிலைச் சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு (ஜூன் 2019 , மார்ச் 2019 )

அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு இ) கொள்முதல் திருப்ப ஏடு ஈ) உரிய குறிப்பேடு

8. விற்பனை ஏட்டில் பதிவு செய்வதற்கு பயன்படும் அடிப்படை ஆவணம் ( மார்ச் 2019 , ஆகஸ்ட் 2022

அ) பற்றுக் குறிப்பு ஆ) வரவு குறிப்பு இ) இடாப்பு ஈ) ரொக்க இரசீது ( மார்ச் 2024 )

9. பின்வரும் வாக்கியங்களில் எது உண்மையல்ல?

அ) ரொக்கத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது
ஆ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகிறது
இ) வியாபாரத் தள்ளுபடி கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகிறது
ஈ) மாற்றுச்சீட்டின் செலுத்தற்குரிய நாளை கணக்கிடும்போது மூன்று நாட்கள் சலுகை நாட்களாகக் கூட்டப்படுகின்றன.

10. இறுதிப்பதிவுகள் பதிவு செய்யுமிடம் ( செப் 2020 , ஜூன் 2023 , ஜூலை 2024 )

அ) ரொக்க ஏடு ஆ) பேரேடு இ) உரிய குறிப்பேடு ஈ) கொள்முதல் ஏடு

<u>விடைகள்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. அ | 3. இ | 4. அ | 5. அ |
| 6. ஆ | 7. ஈ | 8. இ | 9. இ | 10. இ |

# <u>அலகு 7 - துணை ஏடுகள் – II</u>

1. ரொக்க ஏடு ஒரு ( செப் 2021 , ஆகஸ்ட் 2022 , மார்ச் 2023 )

அ) துணை ஏடு ஆ) முதன்மை ஏடு
இ) உரிய குறிப்பேடு ஈ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்

2. ரொக்க ஏடு பதிவு செய்வது ( செப் 2020 , மார்ச் 2019 )

அ) அனைத்து ரொக்கப் பெறுதல்கள் ஆ) அனைத்து ரொக்கச் செலுத்தல்கள்
இ) அ), ஆ) ஆகிய இரண்டும் ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்

3. சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம், எந்த கணக்கை தயாரிக்கத் தேவை இல்லை? ( மே 2022 )

அ) பேரேட்டில் விற்பனைக் கணக்கு ஆ) பேரேட்டில் கொள்முதல் கணக்கு
இ) பேரேட்டில் முதல் கணக்கு ஈ) பேரேட்டில் ரொக்கக் கணக்கு

4. தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை இவ்வாறு அழைக்கலாம்.

அ) சாதாரண ரொக்க ஏடு ஆ) இருபத்தி ரொக்க ஏடு
இ) முப்பத்தி ரொக்க ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5. முப்பத்தி ரொக்க ஏட்டில், முன்னிருந்து தூக்கி எழுதப்பட்ட வங்கி மேல்வரைப் பற்றின் இருப்பு தோன்றுவது ( ஜூன் 2019, ஜூலை 2024 )

அ) ரொக்கப்பத்தி பற்றுப் பக்கம் ஆ) ரொக்கப்பத்தி வரவுப் பக்கம்
இ) வங்கிப்பத்தி பற்றுப் பக்கம் ஈ) வங்கிப்பத்தி வரவுப் பக்கம்

6. கீழ்க்கண்டவற்றில் எது எதிர்ப்பதிவாக பதிவு செய்யப்படும்? ( ஆகஸ்ட் 2022 , ஜூலை 2024 )

அ) சொந்த செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
ஆ) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
இ) வாடிக்கையாளர், நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்திய தொகை
ஈ) வங்கி எடுத்துக் கொண்ட வட்டி

7. ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால், அது ( மே 2022

அ) எதிர்ப்பதிவு ஆ) கூட்டுப்பதிவு இ) ஒற்றைப்பதிவு ஈ) சாதாரணப்பதிவு

8. சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு

அ) ஒரு செலவு ஆ) ஒரு இலாபம் இ) ஒரு சொத்து ஈ) ஒரு பொறுப்பு

9. எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்? ( ஜூன் 2023 )

அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள் ஆ) மேலாளரின் ஊதியம்
இ) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க ஈ) மூலப்பொருட்கள் வாங்க

10. சிறிய செலவினங்களைப் பதியும் ஏடு ( மார்ச் 2024 )

அ) ரொக்க ஏடு ஆ) கொள்முதல் ஏடு
இ) செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு ஏடு ஈ) சில்லறை ரொக்க ஏடு

<u>விடைகள்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஈ | 2. இ | 3. ஈ | 4. இ | 5. ஈ |
| 6. ஆ | 7. அ | 8. இ | 9. அ | 10. ஈ |

# <u>அலகு 8 - வங்கிச் சரிகட்டும் பட்டியல்</u>

1. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது. ( ஜூன் 2023 , மார்ச் 2024 )

அ) வங்கியரால் ஆ) வணிகத்தால்
இ) வணிகத்தின் கடனாளிகளால் ஈ) வணிகத்தின் கடனீந்தோரால்

2. வங்கிச்சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
( மார்ச் 2019 , ஜூன் 2019, செப் 2021 , ஆகஸ்ட் 2022 , மார்ச் 2023 , ஜூலை 2024 )

அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு
இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி ஈ) சில்லறை ரொக்க ஏடு

3. ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியின் பற்றிருப்பு என்பது

அ) வங்கி அறிக்கையின் படி வரவிருப்பு ஆ) வங்கி அறிக்கையின் படி பற்றிருப்பு
இ) ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று ஈ) மேற்கூறிய ஏதுமில்லை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. வங்கி அறிக்கை என்பது ( மார்ச் 2024 )

அ) ரொக்க ஏட்டின் ரொக்கப்பத்தியின் நகல் ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் நகல்
இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
ஈ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

5. எந்த வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிய வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுகிறது?

அ) ரொக்க ஏட்டின் படி ரொக்கப்பத்தியின் இருப்பு மற்றும் ரொக்க ஏட்டின் படி வங்கிப்பத்தியின் இருப்புக்கும் இடையேயான வேறுபாடு
ஆ) ரொக்க ஏட்டின் படி ரொக்கப்பத்தியின் இருப்பு மற்றும் வங்கி அறிக்கை இருப்புக்கும் இடையேயான வேறுபாடு
இ) ரொக்க ஏட்டின் படி வங்கிப்பத்தியின் இருப்பு மற்றும் வங்கி அறிக்கை இருப்புக்கும் இடையேயான வேறுபாடு
ஈ) சில்லறை ரொக்க ஏட்டின் இருப்பு மற்றும் ரொக்க ஏட்டின் இருப்புக்கும் இடையேயான வேறுபாடு

6. வங்கியிலிருந்து பணம் எடுக்கும் போது வங்கியானது. ( செப் 2020 )

அ) வாடிக்கையாளர்கணக்கில் வரவு செய்யும் ஆ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்
இ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

7. பின்வருபவற்றில் எது வங்கிச் சரிகட்டும் பட்டியலின் சிறப்பியல்பு அல்ல?

அ) காசோலை தீர்வடைவதில் ஏற்படும் காலதாமதத்தை சரிகட்டும் பட்டியல் காண்பிக்கும்
ஆ) சரிகட்டும் பட்டியல் கணக்காளர் ரொக்கத்தை கையாளும் போது செய்யக்கூடிய மோசடிகளை தடுக்கிறது
இ) வங்கி இருப்பின் உண்மையான நிலையை அறிய பயன்படுகிறது
ஈ) சரிகட்டும் பட்டியல் கணக்காண்டின் இறுதியில் மட்டுமே தயாரிக்கப்படுகிறது

8. ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹. 2,000. வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ₹. 50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின் படி இருப்பு என்ன?

அ) ₹. 1,950 வரவு இருப்பு ஆ) ₹. 1,950 பற்று இருப்பு
இ) ₹. 2,050 பற்று இருப்பு ஈ) ₹. 2,050 வரவு இருப்பு

9. வங்கி அறிக்கையின் படி இருப்பு ₹. 1,000. செலுத்திய காசோலை வங்கியால் இன்னும் வரவு வைக்கப்படாதது ₹. 2,000. ரொக்க ஏட்டில் வங்கிப்பத்தியின் இருப்பு எவ்வளவு?

அ) ₹. 3,000 மேல்வரைப்பற்று ஆ) ₹. 3,000 சாதகமான இருப்பு
இ) ₹. 1,000 மேல்வரைப்பற்று ஈ) ₹. 1,000 சாதகமான இருப்பு

10. பின்வருவனவற்றில் எது காலத்தினால் ஏற்படும் வேறுபாடு அல்ல?

அ) செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது
ஆ) விடுத்த காசோலை இன்னும் செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படாதது
இ) வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகை
ஈ) ரொக்க ஏட்டில் தவறுதலாக பற்று வைத்தது



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஆ | 2. இ | 3. அ | 4. இ | 5. இ |
| 6. ஆ | 7. ஈ | 8. அ | 9. ஆ | 10. ஈ |

# அலகு 9 - பிழைத் திருத்தம்

1. விதிப்பிழை எழுவது ( மார்ச் 2019 )

அ) ஒரு நடவடிக்கை முழுவதும் விடுபடும்போது
ஆ) ஒரு நடவடிக்கை பகுதி விடுபடும்போது
இ) முதலினம் மற்றும் வருவாயினத்தை வேறுபடுத்தாத போது
ஈ) பேரேட்டில் தவறாக எடுத்து எழுதுதல் மற்றும் தவறாகக் கூட்டும்போது

2. இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள் ( செப் 2020 , செப் 2021 , ஆகஸ்ட் 2022 , மார்ச் 2023 )

அ) விதிப்பிழைகள் ஆ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்
இ) குறைவாகக் கூட்டுதல் பிழைகள் ஈ) பகுதி விடு பிழைகள்

3. இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது ( ஜூன் 2019 , மார்ச் 2024 )

அ) முதல் கணக்கிற்கு ஆ) வியாபாரக் கணக்கிற்கு
இ) அனாமத்துக் கணக்கிற்கு ஈ) இலாப நட்டக் கணக்கிற்கு

4. ஒரு நடவடிக்கை முழுவதுமே பதிவு செய்யப்படாத போது அது ----------- எனப்படும் ( ஜூன் 2023, 2024

அ) விதிப் பிழை ஆ) முழுவிடு பிழை இ) பகுதி விடு பிழை ஈ) இருமுறை பதிந்த பிழை

5. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்துப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது ( மே 2022 )

அ) பகுதி விடு பிழை ஆ) விதிப் பிழை இ) முழு விடு பிழை ஈ) இருமுறை பதிந்த பிழை

6. கீழ்க்கண்ட பிழைகளில் எது இருப்பாய்வைப் பாதிக்காது?

அ) ஒரு கணக்கில் தவறாக இருப்புக் கட்டுதல்
ஆ) பேரேட்டில்எடுத்து எழுதும் போது தவறான கணக்கில் சரியான பக்கத்தில் பதிவு செய்தல்
இ) ஒரு கணக்கில் தவறாகக் கூட்டுதல்
ஈ) ஒரு பேரேட்டுக் கணக்கில் தவறான தொகையை முன்னெடுத்து எழுதுதல்

7. செங்குட்டுவனால் சரக்கு திருப்பித் தரப்பட்டு சரக்கிருப்பில் சேர்க்கப்பட்டு ஆனால் ஏடுகளில் பதிவேதும் செய்யப்படவில்லை. இப்பிழையைத் திருத்தம் செய்யும்போது, கீழ்க்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?

அ) செங்குட்டுவன் கணக்கு ஆ) விற்பனைத் திருப்பக் கணக்கு
இ) வெளித் திருப்பக் கணக்கு ஈ) கொள்முதல் திருப்பக் கணக்கு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. அதியமானிடமிருந்து கடனுக்கு அறைகலன் வாங்கியது கொள்முதல் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும்போது, கீழ்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்கவேண்டும்?

அ) கொள்முதல் கணக்கு ஆ) அதியமான் கணக்கு
இ) அறைகலன் கணக்கு ஈ) இவை ஏதுமில்லை

9. கொள்முதல் ஏட்டின் மொத்தத் தொகை அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது. இப்பிழையைத் திருத்தம் செய்யும்போது, கீழ்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்? ( ஜூன் 2019 )

அ) கொள்முதல் கணக்கு ஆ) அனாமத்துக் கணக்கு
இ) கடனீந்தோர் கணக்கு ஈ) மேற்கண்டது ஏதும் இல்லை

10. கீழ்க்கண்ட பிழைகளில் எந்தப் பிழை அனாமத்துக் கணக்கைப் பயன்படுத்தி திருத்தம் செய்யப்படும்?

அ) கொள்முதல் திருப்ப ஏட்டில் ₹. 1,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
ஆ) நரேந்திரனால் சரக்கு திருப்பித் தரப்பட்டது, ஏடுகளில் பதிவு செய்யப்படாமல் உள்ளது.
இ) அகிலாவால் ₹. 900 மதிப்புள்ள சரக்கு திருப்பித் தரப்பட்டது, விற்பனைத் திருப்பஏட்டில் ₹. 90 என பதிவு செய்யப்பட்டுள்ளது.
ஈ) ரவிவர்மனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்படாமல் உள்ளது.

<u>விடைகள்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. அ | 3. இ | 4. ஆ | 5. ஆ |
| 6. ஆ | 7. ஆ | 8. இ | 9. ஆ | 10. அ |

---

# அலகு 10 - தேய்மானக் கணக்கியல்

1. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகையானது ( மே 2022 , ஜூலை 2024 )

அ) ஆண்டுதோறும் அதிகரிக்கும் ஆ) ஆண்டுதோறும் குறையும்
இ) அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும் ஈ) ஆண்டுதோறும் மாறக்கூடியது

2. தேய்மானம் மற்றும் பராமரிப்புச் செலவுகளை கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது கீழ்க்கண்ட முறைகளில் எது சீரான தாக்கத்தை ஏற்படுத்தும்? ( ஆகஸ்ட் 2022 )

அ) நேர்க்கோட்டு முறை ஆ) குறைந்து செல் இருப்பு முறை
இ) ஆண்டுத் தொகை முறை ஈ) காப்பீட்டு முனைம முறை

3. குறைந்து செல் மதிப்பு முறையில், தேய்மானத் தொகையானது ( ஜூன் 2019 , மார்ச் 2023 )

அ) அனைத்து ஆண்டுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்
ஆ) ஆண்டுதோறும் குறையும்
இ) ஆண்டுதோறும் அதிகரிக்கும்
ஈ) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது? ( செப் 2020 , ஜூன் 2023 , மார்ச் 2024 )

அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு இ) வழக்கொழிவு ஈ) அ, ஆ மற்றும் இ

5. பின்வரும் எந்த சொத்துகளுக்கு வெறுமையாதல் முறையில் தேய்மானம் நீக்கப்படுகிறது?

அ) பொறி மற்றும் பொறி இயந்திரம் ஆ) சுரங்கம் மற்றும் கற் சுரங்கங்கள் ( ஜூலை 2024 )
இ) கட்டடங்கள் ஈ) வணிகக்குறி

6. ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது? ( ஆகஸ்ட் 2022 )

அ) காலப்போக்கு ஆ) தேய்வு மற்றும் உராய்வு
இ) தொழில்நுட்ப மாற்றங்கள் ஈ) மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

7. சொத்தின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள் காலப்போக்கில் அதிகரிக்கும் போது பின்வரும் தேய்மான முறைகளுள் எது சிறந்தது?

அ) நேர்க்கோட்டு முறை ஆ) குறைந்து செல் இருப்பு முறை
இ) தேய்மான நிதி முறை ஈ) ஆண்டுத் தொகை முறை

8. சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின் --------------- அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும். ( மார்ச் 2019 , மே 2022 )

அ) ஆரம்பத்தில் ஆ) இறுதியில் இ) மத்தியில் ஈ) இவைகளில் ஏதுமில்லை

9. எந்நாள் முதற்கொண்டு தேய்மானம் கணக்கிடப்படவேண்டும்? ( மார்ச் 2023 )

அ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள்முதல்
ஆ) சொத்தினை வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த நாள்முதல்
இ) சொத்தினை வியாபார வளாகத்திற்குள் பெற்ற நாள்முதல்
ஈ) சொத்தின் இடாப்பு பெற்ற நாள்முதல்

10. தேய்மான விகிதமானது சமமாக இருக்கும் போது நேர்க்கோட்டு முறைப்படி உள்ள தேய்மானத் தொகை மற்றும் குறைந்து செல் இருப்பு முறையுடன் ஒப்பிடும் போது ( மார்ச் 2024 )

அ) எல்லா ஆண்டுகளிலும் சமமாக இருக்கும்.
ஆ) முதலாண்டில் சமமாகவும், ஆனால், பின்வரும் ஆண்டுகளில் அதிகமாகவும் இருக்கும்.
இ) முதலாண்டில் சமமாகவும், ஆனால், பின்வரும் ஆண்டுகளில் குறைவாகவும் இருக்கும்.
ஈ) முதலாண்டில் குறைவாகவும், ஆனால், பின்வரும் ஆண்டுகளில் சமமாகவும் இருக்கும்.

<u>விடைகள்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. ஆ | 3. ஆ | 4. ஈ | 5. ஆ |
| 6. இ | 7. ஆ | 8. ஆ | 9. அ | 10. ஆ |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# அலகு 11 - முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகள்

1. திரையரங்கத்தின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்

   அ) முதலினச் செலவு ஆ) வருவாயினச் செலவு ( செப் 2020 )
   இ) நீள்பயன் வருவாயினச் செலவு ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

2. புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்தசெலவு ₹. 20,000 ( மார்ச் 2019 , மே 2022 )

   அ) தொடக்கச் செலவு ஆ) வருவாயினச் செலவு
   இ) முதலினச் செலவு ஈ) நீள்பயன் வருவாயினச் செலவு

3. வங்கி வைப்புகள் மீதான வட்டி ( ஜூன் 2023 )

   அ) முதலின வரவு ஆ) வருவாயின வரவு
   இ) முதலினச் செலவு ஈ) வருவாயினச் செலவு

4. நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நடுத்தர காலக் கடன் தொகை ( செப் 2021 )

   அ) முதலினச் செலவுகள் ஆ) வருவாயினச் செலவுகள்
   இ) வருவாயின வரவுகள் ஈ) முதலின வரவுகள்

5. வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது ( ஆகஸ்ட் 2022 , மார்ச் 2023 , ஜூலை 2024 )

   அ) கடந்த காலத்திற்கு ஆ) எதிர் காலத்திற்கு
   இ) நடப்பு காலத்திற்கு ஈ) எந்த காலத்திற்கும்

6. வணிகச் செயல்பாட்டிற்கு முந்தைய செலவுகள்

   அ) வருவாயினச் செலவுகள் ஆ) முன் கூட்டி செலுத்திய வருவாயினச் செலவுகள்
   இ) நீள்பயன் வருவாயினச் செலவுகள் ஈ) முதலினச் செலவுகள்

**விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. அ | 2. இ | 3. ஆ | 4. ஈ | 5. இ | 6. ஈ |

# அலகு 12 - தனிவணிகரின் இறுதிக்கணக்குகள் – I

1. இறுதிச் சரக்கிருப்பு என்பது ஓர் -------------- ( மே 2022 , மார்ச் 2024 )

   அ) நிலையான சொத்து ஆ) நடப்புச் சொத்து இ) கற்பனைச் சொத்து ஈ) புலனாகாச் சொத்து

2. இருப்புநிலைக் குறிப்பு என்பது ------------ ( செப் 2020 )

   அ) ஓர் கணக்கு ஆ) ஓர்அறிக்கை
   இ) ஓர் அறிக்கையுமில்லை, ஓர் கணக்குமில்லை ஈ) மேல் கூறியவற்றில் எதுவுமில்லை

3. வணிகத்தின் நிகர இலாபம் ---------------- அதிகரிக்கும்

   அ) எடுப்புகளை ஆ) பெறுதல்களை இ) பொறுப்புகளை ஈ) முதலினை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. உள்தூக்குக் கூலி எதில் காண்பிக்கப்படும்? ( செப் 2021 , ஜூன் 2023 , ஜூலை 2024 )

அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாப நட்டக் கணக்கில்
இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

5. வங்கி மேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்? ( ஜூன் 2019 )

அ) வியாபாரக் கணக்கில் ஆ) இலாப நட்டக் கணக்கில்
இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்

6. இருப்புநிலைக் குறிப்பு வணிகத்தின் ------------- காண்பிக்கிறது. ( மார்ச் 2019 , செப் 2021 , மார்ச் 2024 )

அ) இலாபத்தினை ஆ) நிதி நிலையினை இ) விற்பனையை ஈ) கொள்முதலை

7. இருப்பாய்வில் காணப்படும் எடுப்புகள் ( ஜூலை 2024 )

அ) கொள்முதலோடு கூட்டப்படும் ஆ) கொள்முதலிலிருந்து கழிக்கப்படும்
இ) முதலோடு கூட்டப்படும் ஈ) முதலிலிருந்து கழிக்கப்படும்

8. இருப்பாய்வில் தோன்றும் சம்பளம் எங்கு காண்பிக்கப்படும்? ( செப் 2021 , மே 2022 )

அ) வியாபாரக் கணக்கின் பற்று பக்கம்
ஆ) இலாப நட்டக் கணக்கின் பற்று பக்கம்
இ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்
ஈ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்

9. பின்வருவனவற்றில் எது நடப்புச் சொத்துகளில் சேராதது? ( செப் 2021 , ஜூலை 2024 )

அ) ரொக்கம் ஆ) சரக்கிருப்பு இ) அறைகலன் ஈ) முன்கூட்டிச் செலுத்திய செலவு

10. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? ( ஆகஸ்ட் 2022 , மார்ச் 2023 )

அ) ஓர் நடப்புச் சொத்து ஆ) ஓர் நீர்மைச் சொத்து
இ) புலனாகும் சொத்து ஈ) புலனாகாச் சொத்து

**விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஆ | 2. ஆ | 3. ஈ | 4. அ | 5. இ |
| 6. ஆ | 7. ஈ | 8. ஆ | 9. இ | 10. ஈ |

## அலகு 13 - தனியாள் வணிகரின் இறுதிக்கணக்குகள்-II

1. முன் கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் தோன்றுவது. ( மார்ச் 2023 )

அ) வியாபாரக் கணக்கில் பற்றுப் பக்கம் ஆ) இலாப நட்டக் கணக்கில் வரவுப் பக்கம்
இ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம் ஈ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்

2. நிகர இலாபம் ( மார்ச் 2019 , செப் 2021 , ஜூன் 2023 )

அ) முதல்கணக்கில் பற்று வைக்கப்படும் ஆ) முதல்கணக்கில் வரவு வைக்கப்படும்
இ) எடுப்புகள் கணக்கில் பற்று வைக்கப்படும் ஈ) எடுப்புகள் கணக்கில் வரவு வைக்கப்படும்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3. இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது ( ஜூன் 2019 , செப் 2021 )

அ) அடக்கவிலையில் ஆ) சந்தை விலையில்

இ) அடக்கவிலை அல்லது சந்தை விலை இதில் எது அதிகமோ அந்த விலையில்

ஈ) அடக்க விலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்

4. முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி தோன்றுவது ( செப் 2020 )

அ) இலாப நட்டக் கணக்கின் வரவுப் பக்கம் ஆ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்

இ) மேற்கண்ட இரண்டிலும் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

5. வாராஐயக் கடன் ஒதுக்கு கணக்கு ஏற்கனவே இல்லையெனில், உருவாக்கப்பட்ட ஐயக்கடன் ஒதுக்கு. ( மார்ச் 2024 )

அ) வாராக்கடன் கணக்கில் பற்று வைக்க வேண்டும்

ஆ) பற்பல கடனாளிகள் கணக்கில் பற்று வைக்க வேண்டும்

இ) வாராக்கடன் கணக்கில் வரவு வைக்க வேண்டும்

ஈ) இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்க வேண்டும்

<u>விடைகள்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. ஆ | 3. ஈ | 4. இ | 5. ஈ |

## <u>அலகு 14 - கணினிமயக் கணக்கியல்</u>

1. கணினியை கணக்கியலில் பொதுவாக உபயோகப்படுத்தப்படும் பகுதிகள்.

அ) வணிக நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் ஆ) சம்பளப்பட்டியல் கணக்கிடுதல்

இ) பண்டகச் சாலைக் கணக்கியல் ஈ) மேலே கூறிய அனைத்தும்

2. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் இவைகளுக்கு ஏற்றவை. ( மே 2022 , மார்ச் 2024 )

அ) சிறிய, பாரம்பரிய வணிகம் ஆ) பெரிய, நடுத்தர வணிகம்

இ) பெரிய, தனித்தன்மையான வணிகம் ஈ) மேலே கூறிய எதுவும் இல்லை

3. பின்வருனவற்றில் எது கணினி அமைப்பின் கூறு அல்ல? ( மார்ச் 2019 )

அ) உள்ளீட்டு அலகு ஆ) வெளியீட்டு அலகு இ) தரவு ஈ) மையச் செயல்பாட்டு அலகு

4. வெளியீட்டு சாதனத்திற்கான ஒரு உதாரணம் ( மார்ச் 2019 , மார்ச் 2023 )

அ) சுட்டி ஆ) அச்சுப்பொறி இ) ஒளியியல் வருடி ஈ) விசைப் பலகை

5. கணினிமயக் கணக்கியல் முறையின் குறைபாடுகளில் ஒன்றானது ( ஜூன் 2019 , செப் 2021 ஜூலை 2024 )

அ) கணினி அமைப்பு செயலிழத்தல் ஆ) துல்லியத்தன்மை

இ) பலதுறைப் புலமை ஈ) தேக்ககம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. பின்வருவனவற்றில் எந்த ஒன்று, கணக்குகளை குறிமுறையாக்கம் செய்யும் முறைகளில் இல்லாதது? ( மே 2022 )

அ) அணுகக் குறிமுறை ஆ) தொடர்ச்சியான குறிமுறை
இ) தொகுப்புக் குறிமுறை ஈ) மதியோட்டுக் குறிமுறை

7. Tally என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது. ( மார்ச் 2019 , செப் 2020 , மார்ச் 2023 )

அ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்
ஆ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்
இ) உள்கட்டமைக்கப்பட்ட மென்பொருள்
ஈ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

8. குறிமுறைகள் மற்றும் நிரல்கள் எழுதுவர்கள் பின்வருமாறு அழைக்கப்படுகின்றனர் ( ஜூன் 2023 )

அ) அமைப்பு பகுப்பாய்வாளர்கள் ஆ) அமைப்பு வடிவமைப்பாளர்கள்
இ) அமைப்பு இயக்குபவர்கள் ஈ) அமைப்பு நிரலாளர்கள்

9. கணக்கியல் மென்பொருள் என்பது இதற்கு உதாரணம். ( ஜூன் 2019 , ஆகஸ்ட் 2022 , ஜூலை 2024 )

அ) அமைப்பு மென்பொருள் ஆ) செயல்பாட்டு மென்பொருள்
இ) பயன்பாட்டு மென்பொருள் ஈ) இயக்கமுறைமை

<u>விடைகள்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஈ | 2. ஆ | 3. இ | 4. ஆ | 5. அ |
| 6. அ | 7. ஆ | 8. ஈ | 9. ஆ | |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com